## உள சமூக ஆதரவு நிகழ்ச்சித் திட்டம்

**அறிமுகம்**

"இன்னலுக்குள்ளான நபர்களுக்கு"[1] நிவாரணம் வழங்குதல் (அதாவது. இலங்கையில் ஏற்பட்ட மோதல்களால் பாதிக்கப்பட்ட நபர்கள்) மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மீட்டெடுப்பதற்கும் உதவுவதற்கும், பாதிக்கப்பட்ட நபர்களின் தேவைகளுக்குப் பதிலளிப்பதற்காகவும் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது அதன் முக்கிய தலையீடுகளில் ஒன்றாக உளவியல் ஆதரவு திட்டத்தை வடிவமைத்தது. மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் மோதல் மற்றும் வன்முறைக்கு ஆளாகியமையின் விளைவாக உணர்ச்சி மற்றும் உளவியல் துயரங்களை அனுபவிக்க நேரிடும் என்பதை ஏற்றுக்கொண்டதற்கமைய இத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, எனவே வன்முறையில் இருந்து தப்பியவர்களின் உளவியல் நலனைப் பாதுகாத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தொழில்முறை உதவி முக்கியமானதொன்றாகின்றது.

**நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- இத்திட்டமானது, **கொள்கையின் அடிப்படையில்**, **தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களின் வகைப்பாட்டின்**[2] **முன்னுரிமை அடிப்படையில்** ஒரு முன்னோடி நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்படுகிறது.
- இன்னலுக்குள்ளான நபர்களுடன் பணிபுரிவதற்காக, **சம்பவ முகாமையாளர்களைப்** ஈடுபடுத்துவதற்கான வழிமுறையானது (**உளவியல் சமூக ஆதரவை வழங்குதல்**[3] **தொடர்பான சம்பவ முகாமையாளர்களின் பயிற்சிக்கான கையேட்டினைப் பயன்படுத்திப் பயிற்சி பெற்றவர்கள்** ) உள்வாங்கப்பட்டுள்ளது.
- **சம்பவ முகாமையாளர்கள் தங்களது செயல்பாடுகளை** நிறைவேற்றுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட செயன்முறையைப் (கீழே உள்ள சம்பவ முகாமையாளர்களுக்கான செயன்முறையின் பாய்வு நிரல்ப் படத்தினைப் பார்க்கவும்) பின்பற்றுவார்கள்:

  1. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூலம் அடையாளம் காணப்பட்ட இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகளை (தேவைகள் மதிப்பீடு) இனங்காண்பதற்கு சம்பவ முகாமையாளர்கள் ஒரு மதிப்பீட்டினை நடத்துவார்கள் அல்லது முன்னோடி உள சமூக ஆதரவுத் திட்டத்திற்காகப் பிரதேச செயலகங்களிலிருந்து பரிந்துரைகளை வழங்குவார்கள். தேவைகள் மதிப்பீடானது, இந் நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட **தேவைகள் மதிப்பீட்டு வினாக்கொத்தினைப்** பயன்படுத்தி நடத்தப்படும். இவ் வினாக்கொத்து அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான தலையீடுகளின் (PADHI) கட்டமைப்பிற்கான[4] உளசமூக மதிப்பீட்டினைத் தழுவிய பதிப்பாகும், இது தனிநபரின் சமூக உளத் தேவைகளை அடையாளம் காண உதவும். குறிப்பு: PADHI கட்டமைப்பு என்பது மனிதாபிமான தலையீடுகளின் பின்னணியில் நல்வாழ்வு, துன்பம் மற்றும் துயரங்கள் பற்றிய உள்ளூர் புரிதல்களை தெளிவுபடுத்துவதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட ஒரு கருவியாகும்.
  2. ஆரம்ப ஆய்வு/தேவைகள் மதிப்பீட்டின் விளைவாக, இன்னலுக்குள்ளான நபர்களின் உளவியல், சமூக, பொருளாதார மற்றும் நிர்வாகத் தேவைகளை அடையாளம் காண, சம்பவ முகாமையாளர்கள், இன்னலுக்குள்ளான நபர்/குடும்பத்துடன் இணைந்து பொருத்தமான முறையில் சம்பவத் திட்டத்தை வடிவமைத்து அதனைத் தனிப்பயனாக்குவார்கள். சம்பவத் திட்டம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால இலக்குகளை, அடையாளம் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் முன்னிலைப்படுத்துகிறது, அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுவதுடன் அதிகரித்துவரும் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படும்

---

[1] *2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டம். பகுதி V பொது. விளக்கம். 27. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றம். இதிலிருந்து புதுப்பிக்கப்பட்டது* https://www.parliament.lk/uploads/acts/gbills/english/6107.pdf

[2] *இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் 2021. வழிகாட்டுதல்கள். பக்கம் 25-26 இலிருந்து பெறப்பட்டது* http://reparations.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=114&Itemid=267&lang=en

[3] கணேசன், எம்., பெர்னாண்டோ, எஸ். ரூ அக்குரெட்டிய, எஸ். (2021), உள சமூக ஆதரவை வழங்கும் சம்பவ முகாமையாளர்களுக்கான பயிற்சிக் கையேடு. கொழும்பு: இழப்பீடுகளுக்கான அலுவலகம். இலிருந்து பெறப்பட்டது http://reparations.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=127&Itemid=283&lang=en

[4] சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி நிலையம் (2009). ஒரு கருவி, ஒரு வழிகாட்டி, ஒரு கட்டமைப்பு. வளர்ச்சிக்கான உள சமூக அணுகுமுறையை விவரித்தல் [அளவீடு கருவி]. கொழும்பு: சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம்

3. சம்பவ முகாமையாளர்கள் அடையாளம் காணப்பட்ட இலக்குகளை அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். தொழில்முறை உளவள ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்கு அரச உளவள ஆலோசனை உதவியாளர்களுக்கும், சிறப்பு மனநல சிகிச்சைக்காக பிராந்திய மருத்துவமனைகளில் உள்ள மனநலப் பிரிவுகளுக்கும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான சம்பவங்களில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் அல்லது சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களின் போது சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்குமான பரிந்துரைகள் இவற்றில் அடங்கும். இது ஏனைய சமூக-பொருளாதாரத் தேவைகள் தொடர்பாக ஏனைய நிறுவனங்களுடனான பின்தொடர்தல்களையும் உள்ளடக்கியதாக அமையலாம்.

4. சம்பவ முகாமையாளர்கள் சம்பவத் திட்டத்தினைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்/ பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துவார்கள். பாதிக்கப்பட்ட நபர்களின் தேவைகளின் அடிப்படையில் சமூக-பொருளாதார, நிர்வாக, உளவியல் மற்றும் மருத்துவ ஆதரவுச் சேவைகளை வழங்கும் வளங்கள் மற்றும்/அல்லது சேவைகளுக்கு பரிந்துரைக்கப்படுவார்கள்.
5. சம்பவ முகாமையாளர்கள் இன்னலுக்குள்ளான நபர்கள் மற்றும் அவர்கள் பரிந்துரைக்கப்பட்ட ஏனைய தொழில் வல்லுநர்கள் ஆகியோரைப் பின்தொடர்வார்கள், முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் சேவைநாடிகளின் முன்னேற்றம் குறித்த விரிவான சம்பவக் குறிப்புகளை ஆவணப்படுத்தவும். இன்னலுக்குள்ளான நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சார்பாக பரிந்து பேசுவதற்கும், அவர்களுக்கான உதவிகளை அதிகரிக்கவும், அவசியமான இடங்களில் சம்பவ மாநாட்டை நடத்துவதற்காகவும், அவர்கள் பிரதேச அளவிலான பங்குதாரர்களுடன் பணியாற்றுவார்கள்.
6. சம்பவ முகாமையாளர்கள் சம்பவத் திட்டத்தை மதிப்பாய்வு செய்து அவற்றில் திருத்தங்கள் மேற்கொள்வது அவசியமா என்பதைக் கண்டறிவர். தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் காலப்போக்கில் மாறலாம் மற்றும் நிகழ்காலத்தில் உருவாகும் தேவைகளைக் கண்டறிவதற்கு சம்பவத் திட்டம் நெகிழ்வாக இருத்தல் வேண்டும். இன்னலுக்குள்ளான நபரின் சம்பவக் கோவை ஆக்கபூர்வமாக நிர்வகிக்கப்பட வேணடிய காலமானது, இன்னலுக்குள்ளான நபர் மற்றும்/அல்லது அவரது குடும்பம் எதிர்கொள்ளும் சிக்கல்களைப் பொறுத்து மாறுபடும், மேலும் இது மாதங்கள் முதல் ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியாகவும் அமையலாம்.
7. பல் துறை ஈடுபாடு தேவைப்படும் சிக்கலான சம்பவங்களில் இன்னலுக்குள்ளான நபர்/களுக்கு ஆதரவளிக்கும் விதத்தில், இணைந்து பணியாற்றுவதற்கும், அவர்களுக்கு உதவுவதற்குமான பல பங்குதாரர்களை உள்ளடக்கிய சம்பவ மாநாடுகளை சம்பவ முகாமையாளர்கள் நடத்துவார்கள்.

- டிசம்பர் 2021 நிலவரப்படி, சம்பவ முகாமையாளர்களுக்கான பயிற்சி முடிவடைந்து, அடுத்த கட்ட நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- முன்னோடிச் செயற்றிட்டம் முடிவடைந்ததும், முன்னோடிச் செயற்றிட்டத்திலிருந்து கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டமானது செம்மைப்படுத்தப்படும்.

**<u>முன்னோடி உளசமூக ஆதரவு நிகழ்ச்சித் திட்டத்திற்காக இன்னலுக்குள்ளான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்கள்</u>**

முன்னோடிச் செயற்திட்டத்திற்கான இலக்கு குழுக்கள் பின்வரும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்:

1. ஆரையம்பதி(மண்முனைப் பற்று) பிரதேச செயலாளர் பிரிவு (மட்டக்களப்பு மாவட்டம்)
2. கரச்சிப் பிரதேச செயலாளர் பிரிவு (கிளிநொச்சி மாவட்டம்)
3. குருணாகல் பிரதேச செயலாளர் பிரிவு (குருணாகல் மாவட்டம்)
4. மாத்தறை, நான்கு பட்டணங்கள் பிரதேச செயலாளர் பிரிவு (மாத்தறை மாவட்டம்)
5. நாவிதன் வெளி பிரதேச செயலாளர் பிரிவு (அம்பாறை மாவட்டம்)

**<u>சம்பவ முகாமையாளர்கள்</u>**

முதற்கட்டமாக, பிரதேச செயலகங்களிலிருந்து இருபது (20) உத்தியோகத்தர்களும், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஆறு (06) உத்தியோகத்தர்களும் சம்பவ முகாமையாளர்களாகப் பயிற்சி பெற்றனர். கோவிட்19 தொற்றுநோயால் ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாக, முன்னர் திட்டமிடப்பட்ட சில வதிவிடப் பயிற்சித் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு மெய்நிகரில் நடத்தப்பட்டன.

## சம்பவ முகாமைத்துவச் செயல்முறை

